# 4 இலங்கையின் அமைவிடம்

இலங்கை இந்தியாவுக்குத் தெற்கே இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள ஒரு தீவாகும். இது உலகிலேயே பெரிய கண்டமான ஆசியாக் கண்டத்திலுள்ள ஒரு நாடாகும்.

**இலங்கையின் அமைவிடம் பற்றியும், அவ் அமைவிடத்தின் காரணமாக ஏற்படும் பயன்கள் பற்றியும் ஒரு விளக்கத்தினை வழங்குவதே இந்த அத்தியாயத்தின் பிரதான நோக்கமாகும்.**

இலங்கை, இந்தியாவுக்கு அருகில் அமைந்துள்ளது. ஆனால் இந்தியாவிலிருந்து பிரிந்து இருந்தாலும், அதன் நெருங்கிய அமைவு காரணமாக காலநிலை, பொருளாதாரம், மற்றும் பண்பாட்டு அம்சங்களில் இந்தியாவை ஒத்த தன்மைகளைக் கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது.




படம் 4.1

**இந்தியாவுக்கு அருகிலுள்ள ஒரு தீவான இலங்கையின் அமைவிடம்**

## இலங்கையின் அமைவிடம் காலநிலையில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது

- இலங்கை ஒரு தீவாக இருப்பதனாலும், தகுந்த அதன் அமைவிடத் தாலும், இந்து சமுத்திரத்தில் வீசும் காற்றினாலும், வெப்பநிலை குறைவடைவதுடன் வருடம் முழுவதும் மழை கிடைக்கின்றது.

- இந்திய உபகண்டத்தில் இருந்து வீசும் வரண்ட காற்றுக்களின் செல் வாக்கினால் இலங்கையின் வடபகுதியில் வெப்பநிலை அதிகமாகக் காணப்படுகின்றது.

- பருவக் காற்றுக்களின் (மொன்சூன்) செல்வாக்கினால் மழை கிடைக்கின்றது.

## இலங்கையின் அமைவிடம் பொருளாதாரத்தில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது

- பண்டைக் காலத்திலிருந்து இன்றுவரை கிழக்கு - மேற்குக் கப்பல் பாதையின் மையமாக விருத்தி பெற்றமை.

- சர்வதேச வர்த்தகத்தில் இலங்கைத் துறைமுகங்களின் முக்கியத்து வங்கள்.

- கவர்ச்சியான இடங்களின் அமைவிடம் காரணமாக உல்லாசப் பயணக் கைத்தொழிலின் விருத்தி.

- மேலை நாடுகளின் வருகையுடன் புதிய பொருளாதாரப் பாங்குகளின் தோற்றம்.

## இலங்கையின் அமைவிடம் பண்பாட்டில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது

- பல்வேறு மக்கட் பிரிவினரின் கலப்பினால் பல்வேறு மொழி, மத, இனப் பிரிவினர் காணப்படுகின்றனர். உதாரணமாக, இந்தியா மற்றும் அரேபியாவிலிருந்து வந்தோர்.

- மேலைத் தேசத்தவரின் வருகையுடன் பல்வேறு கலாசார அம்சங்கள் சமூகத்துடன் கலத்தல்.

**செயற்பாடுகள்**

**படம் 4.1 இனை அவதானித்து அடைப்புக்குறிக்குள் இருக்கும் பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.**

*(வங்காள, இந்து, மன்னார், பாக்கு, ஆசியா)*

1. *இலங்கை உலகத்தின் மிகப்பெரிய கண்டமான ............... கண்டத்திற்கு உரித்தான நாடாகும்.*
2. *............... விரிகுடா இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அமைந்துள்ளது.*
3. *இலங்கை இந்தியாவிலிருந்து ............... நீரிணையால் (ஜலசந்தி) பிரிக்கப்பட்டுள்ளது.*
4. *இலங்கை ............... சமுத்திரத்தில் அமைந்துள்ளது.*
5. *இலங்கையின் வடக்கில் அமைந்துள்ள கடற்பரப்பு ............... விரிகுடா என அழைக்கப்படும்.*

**இலங்கையின் சார்பு அமைவிடம்**

சமுத்திரங்கள், கடல்கள், கண்டங்கள் மற்றும் சூழவுள்ள நாடுகள் என்பவற்றின் அமைவிடத்துடன் தொடர்புபடுத்தி ஒரு நாட்டினை அடையாளம் காண்பது சார்பு அமைவிடம் (Relative Location)எனப்படும்.

**அதற்கிணங்க இலங்கை அமைவு பெற்றிருப்பது,**

- ஆசியாக் கண்டத்தின் தெற்கில்.
- இந்து சமுத்திரத்தின் வடக்குப் பக்கமாக.
- தென் கிழக்கு ஆசியாவின் மேற்கில்.
- ஆபிரிக்க கண்டத்தின் கிழக்காக. (பார்க்க படம் 4.2)




**படம் 4.2**

**இலங்கையின் சார்பு அமைவிடம்**

**செயற்பாடு**

மேலேயுள்ள விடயங்களை உங்கள் பாடசாலையில் உள்ள உலகப் படம் மற்றும் தேசப்படத்தின் உதவியுடன் அவதானியுங்கள்.




**படம் 4.3**
**உலகப்படத்தில் இலங்கையின் அமைவிடம்**

**செயற்பாடு**

இலங்கை இந்தியாவுக்கு அருகில் அமைந்திருப்பதன் காரணமாகச் சமூகத்தில் நிகழும் மாற்றங்களைக் குறிப்பிடுக.

## இலங்கையில் அமைவு பெற்றுள்ள முக்கிய இடங்கள்

இலங்கை, தற்பொழுது ஆசியாவில் விரைவாக அபிவிருத்தி அடைந்து வரும் ஒரு நாடாகும். சமூக, பொருளாதாரத் துறைகளில் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையே அதற்குரிய காரணங்களாகும்.

- புதிய துறைமுகங்கள், புதிய விமான நிலையங்கள் மற்றும் அதிவேகப் பாதைகள் அமைத்தல்.
- நகர அபிவிருத்தி

கீழ்வரும் படம் இலங்கையின் பொருளாதார, சமூக, கலாசார ரீதியாக முக்கியத்துவம் பெற்ற சில இடங்களை எடுத்துக் காட்டுகின்றது.





படம் 4.4 இலங்கையின் முக்கியமான இடங்கள்






படம் 4.5




படம் 4.6

**கொழும்பு - மாத்தறை, கொழும்பு - கட்டுநாயக்கா அதிவேக பாதை**


### செயற்பாடுகள்

1. இலங்கைப் புறவுருவப் படத்தில் பின்வரும் இடங்களைக் குறித்துப் பெயரிடுக.
   - கட்டுநாயக்கா, மத்தள சர்வதேச விமான நிலையங்கள்
   - கொழும்பு, திருகோணமலை, காலி, அம்பாந்தோட்டை துறை முகங்கள்.
   - காலி, பதுளை, இரத்தினபுரி, அநுராதபுரம், திருகோணமலை, குருநாகல், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு நகரங்கள்.

2. ''விரைவாக விருத்திபெற்றுவரும் இலங்கை'' என்னும் தலைப்பில் சிறு விவரணம் ஒன்றினை எழுதுக.

**உலகின் ஏனைய தீவுகள்**

உலகில் பல்வேறு அளவிலான நிலப்பரப்புகளைக்கொண்ட தீவுகள் பெருமளவு காணப்படுகின்றன. அத்தகைய சில தீவுகளையும், நிலப்பரப்பினையும் படம் 4.7 குறித்துக் காட்டுகின்றது.




படம் 4.7

**உலகிலுள்ள சில தீவுகளும் அவற்றின் நிலப்பரப்புகளும்**

**மூலம் -** *http://en.wikipedia.org/21/07/2014*

**செயற்பாடுகள்**

1. படம் 4.7 இனை அவதானித்து, பிரதான தீவுகளை அடையாளம் கண்டு உலகப்படத்தில் அவற்றைக் குறித்துப் பெயரிடுக.

2. நிலப்பகுதியின் பரப்பிற்கு இணங்க தீவுகளை வரிசைப்படுத்தி எழுதுக.

3. ஒவ்வொரு தீவின் முன்பும் பரப்பினைக் குறிப்பிடுக.

**ஒப்படை**

தேசப் படத்தினதும் பாடப் புத்தகத்தினதும் உதவியுடன் கீழ்வரும் அட்டவணையைப் பூர்த்திசெய்க.

| தீவின் பெயர் | அமைவுபெற்றுள்ள சமுத்திரம் |
|---|---|
| ஜப்பான் | |
| நியூசிலாந்து | |
| மாலைதீவு | |
| ஐஸ்லாந்து | |
| பிரித்தானியா | |
| சிசெல்ஸ் | |

## கலைச்சொற்கள்

| | |
|---|---|
| தீவு | Island |
| சார்பமைவிடம் | Relative location |
| நீரிணை | Strait |
| பருவக் காற்றுக்கள் | Monsoon winds |
| துணைக் கண்டம் | Sub Continent |
| இடப்பெயர்வு | Migration |
| பூகோளம் | Globe |
| அதிவேகப் பாதைகள் | Express ways |
| மையம் | Centre |
| நீரியல் நாகரிகம் | Hydraulic civilization |
| வர்த்தக மையம் | Commercial centre |
| பொருளாதார மையம் | Economical centre |
| சர்வதேசத் துறைமுகம் | International harbour |
| வெளிச்ச வீடு | Lighthouse |